www.tamilarangam.net

# தமிழ் ஈழ விடுதலை இயக்கத்திற்கும் ஈழ மக்களுக்கும் எதிரான புலிகளின் அராஜக நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம்

நூற்றுக்கணக்கான தமிழ் ஈழ விடுதலை இயக்க (TELO) போராளிகளையும் இயக்கத்தலைவர் தோழர் சிறீ சபாரெத்தினத்தையும்; ஆதரவாளர்களையும்; ஏராளமான ஈழ மக்களையும் கொலை செய்தும் தாக்குதல் வெறியாட்டங்களை நடத்திய புலிகளின் அராஜகத்தை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரான்சுக் கிளையினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் நண்பர்கள் யார், பகைவர்கள் யார்; என்பது பற்றிய தெளிவு அறவே இல்லாத புலிகள் மீண்டும் ஒரு முறை தமது கோர வரலாற்றை TELO இயக்கத்தினதும்; ஈழ மக்களினதும் இரத்தத்தில் எழுதி தற்காலிகமாக தமது இரத்த தாகத்தை தணித்திருக்கின்றனர். ஒன்றாய், இரண்டாய் தொடர்ந்த புலிகளின் கொலைகள் இன்று பல நூறாகி ஈழப் போராட்டத்தை பல ஆண்டு காலம் பின் தள்ளியிருக்கின்றன. இந்த வெறியாட்டங்களின்போது புலிகள் நடந்து கொண்ட கோரத்தனம் கண்டு மனித நாகரிகமே வெட்கித் தலை குனிகின்றது. இந்தக் கொடுமைகளின் இரத்தச் சாட்சியங்கள் இன்று ஈழ வீதிகளில் எரிந்தும் எரியாமலும் கிடக்கும் போராளிகளின் உடல்களும்; புலிகளின் கோரத்தனம் கண்டு எரிந்து போன உள்ளங்களும்

ஈழப்போராட்டத்தில் நண்பர்களான TELO போராளிகளைக் கொன்றழித்த புலிகள் பகைவர்களான சிறீலங்கா அரச படைகளுடன் கை கோர்த்துச் செயற்படுகின்றனர். TELO முகாம்களை தரை மார்க்கமாக புலிகள் சுற்றிவளைக்க புலிகளின் தகவலை ஏற்று வான் மார்க்கமாக ஆக்கிரமிப்புப் படைகள் குண்டு வீசின. எதிரியின் குண்டு வீச்சால் சிதறி ஓடிய TELO போராளிகளையும் பொதுமக்களையும் புலிகள் குதறின இன்று நூற்றுக்கணக்கான போராளிகளைக் கொன்றும்; ஆயுதங்களைப் பறித்தும்; மக்களின்; மனத்திலே தளர்ச்சியை; ஏற்படுத்தியும் புலிகள் கொடுத்த தைரியத்தில்..... புலிகள் திறந்துவிட்ட பாதையில் இது வரை காலமும் முகாம்களுக்குள் முடங்கிக் கிடந்த எதிரிப் படைகள் ஈழ வீதிகளில் வந்து எங்கள் மக்களைக் கொன்றழிக்கத் தொடங்கிவிட்டன புலிகளின் இந்தக் கோரச் செயல்கள் ஈழப்போராட்டத்தின் வழிகளை அழித்ததுடன்; எதிரியின் கரங்களைப் பலப்படுத்தவே வழி கோரியுள்ளது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்த வரையில் நேரடியாகவும்; ஈழத்தேசிய விடுதலை முன்னணியினூடாகவும் இப்பிரச்சனைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காணுவதற்கு எடுத்த முயற்சிகள் பலனளிக்காமல் போகவே புலிகளினது மனிதாபிமானமற்ற படுகொலைகளுக்கு எதிரான ஈழ மக்களின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் 9.5.86ல் பூரண கர்த்தாலை மேற்கொள்ளும்படி ஈழ மக்களை வேண்டியிருந்தோம். புலிகளின் துப்பாக்கிகளுக்கும், வன்முறைகளுக்கும் அஞ்சாத ஜனநாயக முற்போக்குச் சக்திகளுக்கு என்றுமே ஆதரவு கொடுத்து வரும் எமது வீரமிகு ஈழ மக்கள் எமது வேண்டுகோளை ஏற்று பூரண கர்த்தாலை மேற்கொண்டதுடன் 10.5.86 அன்று புலிகளின் படுகொலைகளுக்கெதிரான மாபெரும் எதிர்ப்பு ஊர்வலமொன்றையும் நடாத்தி புலிகளின் வரலாற்றுத் துரோகத்தைச் சாடியுள்ளனர்.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் மீது எமக்குள்ள நம்பிக்கையை நிலை நிறுத்துவதற்கும் ஈழ விடுதலைப் போராட்டத்தில் தோன்றியுள்ள புற்றுநோயான இயக்க மோதல்களை நிறுத்துவதற்கும் நம்பிக்கையுடன் உழைக்க முன்வருமாறு சகல தேசபக்தி கொண்ட ஈழ மக்களையும் வேண்டுகின்றோம்.

ஈழ மக்கள் தம்மை அமுக்கி நிற்கும் அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிந்து சுபீட்சமான வாழ்வை அமைத்துக் கொள்வதற்காகவேனும் சகல வன்செயல்களையும் நிறுத்தும்படி புலிகளை வேண்டுகிறோம். ஈழ மக்களின் சார்பாக மட்டுமன்றி மனித நாகரீகத்தின் பெயராலும் இவ்வேண்டுகோளை புலிகளுக்கு விடுக்கிறோம். இவ்வேண்டுகோளை புலிகள் ஏற்க மறுப்பின் மக்களால் தூக்கியெறியப் படுவார்கள், வரலாற்றின் குப்பைத் தொட்டியில்தான் இவர்கள் இடப் படுவார்கள் என்பதை புலிகளுக்கு நினைவூட்டுகிறோம்.

ஈழப் போராட்டத்தில் படிந்திருக்கும் மாறாத கறையாகிய புலிகளின் இரத்தக்கோர நிகழ்வுகளைக் கண்டிக்குமாறும், ஈழப் போராட்டத்தை சரியான பாதையில் முன்னெடுக்க கண்காணிப்புடனுன உங்கள் பங்களிப்புக்களை வழங்குமாறு அனைத்து பிரான்சு வாழ் ஈழ மக்களையும் கேட்டுக் கொள்கின்றோம். கொட்டும் பனியிலும் கொடும் குளிரிலும் நீங்கள் உடல் வருத்தி உழைக்கும் பணம் உங்கள் பிள்ளைகளையும்; உங்கள் சகோதரர்களையும் உங்கள் தேசத்திலே சுட்டு; எரித்துக் கொல்வதற்கு இனிவரும் எக்காலத்திலும் அனுமதியாதீர்கள்.

அராஜகத்திற்கு எதிராக அணி திரள்வோம்!
இறுதி வெற்றி ஈழ மக்களுக்கே!

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்
பிரான்சுப் பிரிவு

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்